பத்திரிக்கைச் செய்தி

செ.வெ.எண்: 09 நாள்:09.08.2010

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுலவலா் திரு.கோ.சு.இராமராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வீட்டுமனை பட்டா வேண்டி 86 மனுக்களும், சத்துணவு அமைப்பாளா் வேலை வேண்டி 27 மனுக்களும், முதியோர் உதவித் தொகை வேண்டி 40 மனுக்களும், குடும்ப அட்டை மற்றும் பெயர் மாற்றுதல் கோரி 22 மனுக்களும், வேலை வாய்ப்பு வேண்டி 19 மனுக்களும், காவல் துறை சார்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி 17 மனுக்களும், சுனாமி வீடுகள் வேண்டி 8 மனுக்களும், சமத்துவபுர வீடு வேண்டி 31 மனுக்களும் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் கோரி 68 மனுக்களும் என ஆக மொத்தம் 318 மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்கள் மனுதாரா் முன்னிலையில் விசாரணை செய்து அந்தந்த துறை அலுவலா்களிடம் வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் அலுவலா் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் மணமேல்குடி வட்டம், ஜெம்புமகாதேவிப்பட்டினம் ஏம்பலைச் சேர்ந்த பால்ஜோசப் கமால்(வயது 18) கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றபோது படகிலிருந்து தவறிவிழுந்து இறந்ததனால் முதலமைச்சா் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ. 15,000/-த்திற்கான காசோலையை அவரது தாயாா் திருமதி. முத்துலெட்சுமியிடமும், மரவாமதுரை, கூப்பகம்பட்டியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம்'(வயது 35) களிங்கப்பட்டியில், பாலக்குறிச்சி சாலையில் சாலை விபத்தில் இறந்ததனால் முதலமைச்சா் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.35,000/-த்திற்கான காசோலையை அவரது மனைவி திருமதி.சித்தராவிடமும் மாவட்ட வருவாய் அலுவலா் திரு.கோ.சு. இராமதாசு அவர்கள் வழங்கினாா்.

மேலும் தனித்துணை ஆட்சியர்(வண்ணத் தொலைக்காட்சி) சாா்பில் கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளா் நல வாரியம் அமைத்து உறுப்பினா்களை பதிவு செய்தல் மற்றும் பல்வேறு நல உதவிகள் வழங்குதல் தொடா்பாக 9 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 8 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில் சோனாஸ் கேபிள் விஷன், புவனா கேபிள் விஷன், வானவில் கேபிள் விஷன் ஆகியவற்றில் உள்ள 9 உறுப்பினா்களுக்கு கம்பி வடத்தொலைக்காட்சி நல வாரிய உறுப்பினா் அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவா் அவர்களின் உத்தரவின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலா் அவர்கள் வழங்கினாா்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலா்(நிலமெடுப்பு) திருமதி.ந.ஜீவகனி, தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) திருமதி.ந. சசிகலா மற்றும் அரசு அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

*செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.*